NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2009

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This paper consists of 8 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2009

## SECTION A

<u>பகுதி ஒன்று</u>

1. **கீழ்வரும் பகுதியை நன்றாக படித்து பின்வரும் கேள்விகளுக்கு சரியான பதில் தருக :**

தீபனும் அவன் நண்பர்களும் திரைப்படம் பார்த்துவிட்டுத் தங்கள் வீட்டின் அருகில் இருந்த பூங்காவின் வழியாக நடந்து வந்துகொண்டிருந்தனர். மூவரும் தாங்கள் கண்ட திரைப்படத்தைப்பற்றி வேடிக்கையாகப் பேசிக்கொண்டே நடந்ததால் அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. இருள் பரவத் தொடங்கியது. மூவரும் அப்போதுதான் நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்தனர். உடனே அவர்களின் நடை துரிதமாகியது.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு மின்னொளி வந்தது. அதன் கதிர்கள் அவர்களின் கண்களைச் கூசச்செய்தன. அவர்கள் பயத்தில் அருகில் இருந்த புதருக்குப் பின்னால் மறைந்துகொண்டனர். அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வானத்தில் இருந்து ஒரு பெரிய வான்கலம் பூங்காவில் தரை இறங்கியது. அது பேரொலியை எழுப்பிக்கொண்டு வந்திறங்கியது. அந்த வான்கலத்தில் பலவிதமான விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தன. மூன்று நண்பர்களும் கண்ட காட்சியை அவர்களால் நம்பமுடியவில்லை. அவர்கள் வான்கலங்களைப்பற்றிப் புத்தகங்களில் படித்ததுண்டு; படங்களில் பார்த்ததுண்டு. ஆனால், நேருக்கு நேராகப் பார்ப்பது இதுதான் முதல் தடவை.

திடீரென்று வான்கலத்தின் கதவு திறந்தது. உள்ளிருந்து முட்டை வடிவம் கொண்ட வேற்றுலக மனிதர்கள் வெளியே வந்தனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன. அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒருவருக்கும் புரியாத ஒரு மொழியில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

IEB Copyright © 2009

பின்னர், தங்கள் துப்பாக்கிகளால் பூங்காவில் இருந்த மரங்களைச் சுட்டனர். துப்பாக்கிகளிலிருந்து வந்த ஒளிக்கதிர்கள் மரங்களைச் சிறியதாக்கின. இதைக் கண்டவுடன் தீபனும் அவன் நண்பர்களும் நடுநடுங்கினர். வேற்றுலக மனிதர்களில் ஒருவன் அவ்வாறு சிறியனவாக மாறிய மரங்களை எடுத்துத் தன் இடுப்பில் பொருத்தப்பட்டிருந்த பெட்டிக்குள் போட்டான். வேற்றுலகத்திலிருந்து வந்த மனிதர்கள் மரங்களைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர்.

இவர்களை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று தீபன் எண்ணினான். அதனால், அவன் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியே ஓடினான். தீபனைக் கண்ட வேற்றுலக மனிதர்கள் தங்கள் துப்பாக்கியால் அவனை நோக்கிச் சுட்டனர். பாவம்! தீபனுடைய உருவமும் திடீரென்று சிறியதாக மாறியது. அவனும் வான்கலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டான். அவனது இரு நண்பர்களும் செய்வது அறியாமல் விழித்தனர்.

1.1 **கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக :**

1.1.1 வீட்டின் அருகில் இருந்த ---------------------------வழியாக நடந்து வந்துகொண்டிருந்தனர். (1)

1.1.2 அவர்களுக்கு--------------------------போனதே தெரியவில்லை. (1)

1.1.3 திடீரென்று எங்கிருந்தோ ஒரு --------------------வந்தது. (1)

1.1.4 அது பேரொலியை ------------------------வந்திறங்கியது. (1)

1.1.5 ---------------------------வான்கலத்தின் கதவு திறந்தது. (1)

**[5]**

1.2 சரியான விடை தருக :

1.2.1 மூவரும் எதைப் பற்றி பேசிக்கொண்டே நடந்தார்கள்? (2)

1.2.2 எவை சிறுவர்களின் கண்களைக் கூசச் செய்தன? (2)

1.2.3 பயத்தில் அவர்கள் என்ன செய்தார்கள்? (2)

1.2.4 அவர்கள் கண்ட காட்சி என்ன செய்தது? (2)

1.2.5 வான்கலத்தின் உள்ளிருந்து யார் வந்தது? (2)

1.2.6 தங்கள் துப்பாக்கிகளால் எதை சுட்டனர்? (2)

1.2.7 தீபன் ஏன் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிய ஓடினான்? (2)

**[14]**

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று எழுதுக :

1.3.1 பூங்கா தீபனின் வீட்டின் அருகில் இருந்தது. (1)

1.3.2 மின்னொளி வந்ததைக் கண்டு அவர்கள் பயபடவில்லை. (1)

1.3.3 அந்தக் காட்சியை மூன்று நண்பர்கள் கண்டார்கள். (1)

1.3.4 வான்கலத்தின் கதவு திடீரென்று திறந்தது. (1)

1.3.5 தீபனை, வேறுலக மனிதர்கள் தாங்கள் துப்பாக்கியால் சுட்டனர். (1)

**[5]**

1.4 கீழ்வரும் சொற்களை வரிசைப் படுத்தி, முறையான வாக்கியங்கள் எழுதுக :

1.4.1 மூவரும் நேரம் ஆகிவிட்டது அப்போது தான் என்பதை உணர்ந்தனர். (2)

1.4.2 எப்படியாவது தடுக்க வேண்டும் இவர்களை தீபன் எண்ணினான் என்று. (2)

1.5 கதையிலிருந்து கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொற்களை தருக :

1.5.1 முன்னால் [இரண்டாம் பகுதி] (1)

1.5.2 முடியது [மூன்றாம் பகுதி] (1)

**[6]**

**30 marks**

IEB Copyright © 2009

## SECTION B

பகுதி இரண்டு

2. கீழ்வரும் பகுதியை சுருக்கி எழுதுக:

[சுமார் 12 - 15 வரிகள்]

பறவைகளில் பறக்க முடியாதவை சில உள்ளன.நெருப்புக்கோழி, கீவி, ஈமு முதலியவற்றால் பறக்க முடியாது. எனினும் இவை வேகமாக ஓடும். ஆனால், பறக்க முடியாமலும் வேகமாக ஓடமுடியாமலும் உள்ள ஒரு பறவை உண்டு. அதுதான் பெங்குவின். பெங்குவின் ஒரு விந்தையான பறவை, இதன் உடல் பெரிது; இறக்கைகள் சிறியவை, எனவே இப்பறவை பறக்க இயலாது. ஆனால், தன் இறக்கைகளைத் துடுப்புப்போலப் பயன்படுத்தி இது தண்ணீரில் மிக வேகமாக நீந்தும்.

பெங்குவினின் கால்கள் மற்ற பறவைகளைப் போலன்றிச் சிறிது பின்னோக்கித் தள்ளி அமைந்துள்ளன ஆகையால், இது கால்களை ஊன்றி நிமிர்ந்து நடந்து செல்ல முடிகிறது. ஆனால் வேகமாக ஓட முடியாது இது தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்வது பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

முட்டையிடும் காலத்தில் இப்பறவைகள் கூட்டங் கூட்டமாகக் கரைக்கு வருகின்றன. இவை கூடு கட்டுவதில்லை. தரையிலோ பாறையிலோ முட்டையிடுகின்றன. அவை முட்டை மீது உட்கார்ந்து அடை காக்கின்றன. குஞ்சு பொரிக்க எட்டு வாரங்களாகும். பெங்குவினை எளிதில் பழக்கலாம். வளப்பவரிடம் இது அன்பாக இருக்கும். பெங்குவின் சுமார் 35 ஆண்டுகள் வாழும்.

**10 marks**

IEB Copyright © 2009

## SECTION C பகுதி மூன்று

3. <u>இலக்கண பயிற்சி</u>

மாலாவும் அவளுடைய நான்கு வயது தங்கையும் பூங்காவிற்குச் சென்றனர். மாலாவின் தங்கை தனக்கு ஒரு மலரைப் பறித்துத் தருமாறு கேட்டு அழுகிறாள். 'பூக்களைப் பறிக்கக் கூடாது' என்ற அறிவிப்பை மாலா காண்கிறாள். அதே சமயம் பூவைப் பறித்துத் தராவிட்டால் தங்கை அழுகையை நிறுத்தமாட்டாள் என்பதையும் அவள் அறிவாள். மாலாவின் நிலையில் நீ இருந்தால் என்ன செய்திருப்பாய் என்பதை வகுப்பின் முன் வந்து கூறு.



3.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு [4] பெயர்ச்சொற்களை எழுதுக : (4)

3.3 வினைச்சொல் என்றால் என்ன? (1)

3.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு [2] வினைச்சொற்கள் எழுதுக. (2)

3.5 ஒருமைக்கு பன்மை எழுதுக:

3.5.1 பூ ------------------------ (1)

3.5.2 மலர்------------------------ (1)

3.5.3 செடி------------------------ (1)
**[3]**

3.6 ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக:

உம்: தாத்தா : பாட்டி

3.6.1 மகன் - (1)

3.6.2 ஆண் - (1)

3.6.3 சிறுவன் - (1)

3.6.4 தம்பி (1)
**[4]**

IEB Copyright © 2009

3.7 பிரித்து எழுதுக :

3.7.1 அவளுக்குக்கொடு (1)

3.7.2 பலர்க்கொட்டை (1)
**[2]**

3.8 சேர்த்து எழுதுக :

3.8.1 அங்கு + போனான் (1)

3.8.2 மலரை + பறி (1)
**[2]**

3.9 தமிழ் சொற்களில் எழுதுக :

3.9.1 3 = (1)

3.9.2 15 = (1)

3.9.3 100 = (1)

3.9.4 1000 = (1)
**[4]**

3.10 எதிர்ச்சொற்கள்

உம் : அங்கே -இங்கே

3.10.1 அது (1)

3.10.2 சிறி (1)

3.10.3 வா (1)

3.10.4 நான் (1)

3.10.5 பின் (1)
**[5]**

3.11 சரியாக எழுதுக :
உம் : லர்ம = மலர்

3.11.1 துவய (1)

3.11.2 அகிறாமுள் (1)
**[2]**

3.12 கிழ்வரும் சொற்களை வரிசைபடுத்தி முறையான

வாக்கியங்கள் எழுதுக :

உம் : அன்பன் போனான் விட்டுக்கு

அன்பன் விட்டுக்குப் போனான்.

| | | | |
|---|---|---|---|
| 3.12.1 | மாலாவின் மலரைப் ஒரு தங்கை பறித்தாள். | ள். | (2) |
| 3.12.2 | அவளுடைய வயது நான்கு தங்கையின் | | (2) |
| | | | **[4]** |

3.13 இரண்டு வகை பூக்கள் எழுதுக :
உம் -- அல்லிப் பூ

| | | |
|---|---|---|
| 3.13.1 | ------------------------------------------------------- | (1) |
| 3.13.2 | ------------------------------------------------------- | (1) |
| | | **[2]** |

3.14 கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும்

வரிசையாக எழுதுக :உம் -- அ இ ஈ ஆ உ ஊ

= அ ஆ இ ஈ உ ஊ

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3.14.1 | ஆ ஊ ஈ ஏ ஔ ஓ ஐ | | | | | (2) |
| 3.14.2 | இவன் | அவன் | எட்டு | ஈசல் | ப் | (2) |
| | | | | | | **[4]** |

**40 marks**

மொத்த மதிப்பெண்கள் **[80]**

**Total: 80 marks**